*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*11 08 2026        TUESDAY 12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

- *மக்களவை சுமுகமாக செயல்பட அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.*

- *பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், ஒரு கோடி வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

- *திருப்பதி, போபால் விமான நிலையங்கள் உள்ளிட்ட மேலும் 11 நகரங்களில் மின்னணு விசாவை பயன்படுத்தி வெளிநாட்டவர்கள் இந்தியா வர முடியும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.*

- *அமெரிக்காவில் குடியுரிமை உள்ளிட்ட வசதிகளுக்காக ஆன்லைன் விண்ணப்பங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.*

- *துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் Mohun Bagan Super Giant அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>>>><<<<<<<<*

*மக்களவை சுமுகமாக செயல்பட அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.*

*மக்களவையில் இதனை தெரிவித்த அவர், நீட் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதம் நடத்த மத்திய அரசு முன்வந்துள்ளதை சுட்டிக்காட்டினார்.*

*இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.*

*கேள்வி நேரத்தின் முக்கியத்துவம் குறித்து குறிப்பிட்ட திரு. ஓம் பிர்லா, அரசின் பொறுப்புணர்வை இது எடுத்துக்காட்டுவதாக தெரிவித்தார்.*

*>>>>>>>><<<<<<<<*

*நீட் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.*

மக்களவை இன்று கூடியதும், அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேள்வி நேரத்தை நடத்த முயன்றார்.

அப்போது, நீட் பிரச்சினையை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீது, காவல்துறையினர் நடத்திய தாக்குதலை கண்டித்து, எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் □ா, மக்களவையில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் நீட் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால், அவை முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையும் ஒத்தி வைக்கப்பட்டன.

>>>>>>>><<<<<<<<

தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. அமித் □ா, திரு. ஜெ.பி. நட்டா, திரு. நிதின் கட்கரி, திரு. கிரண் ரிஜிஜு, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்து இதில் கொண்டனர்.

>>>>>>>><<<<<<<<

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், ஒரு கோடி வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை செயலர் திரு. Satendra Singh தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இத்திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 25 லட்சம் வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய நித்தி ஆயோக் உறுப்பினர் திரு. Rajiv Gauba, வீட்டு வசதி என்பது நகர்ப்புற திட்டமிடுதலின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

நகர்ப்புற மக்கள் தொகை அதிகரித்து வரும் நிலையில், வீட்டு வசதி திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

நகர்ப்புற பகுதிகளில் வீட்டு வசதி திட்டங்களை செயல்படுத்த நிலம் கிடைப்பது பிரச்சினையாக உள்ளதாக திரு. Rajiv Gauba தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

சுதந்திரப் போராட்ட வீரர் Khudiram Bose-ன் 119-வது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 18 வயதில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த Khudiram Bose-ன் தைரியமும், நாட்டுப் பற்றும் போற்றத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டதற்காக, 1908ஆம் ஆண்டு இதே நாளில் Khudiram Bose ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.

>>>>>>>><<<<<<<<

ஜார்க்கண்ட் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரம் தொடர்பாக, ராஞ்சியில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அம்மாநில சட்டப்பேரவையை நோக்கி பேரணி நடத்திய மாணவர்கள் மீது, காவல்துறையினர் நடத்திய தாக்குதலில் ஏராளமானோர் காயமடைந்தனர்.

உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவர் தலைவர் திரு. Devendra Nath Mahto ராஞ்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ராஞ்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பதற்றம் நிலவுவதால், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் மீது காவல்துறையினர் நடத்திய தாக்குதலை கண்டித்து, பிஜேபி சார்பில் இன்று முழுஅடைப்பு போராட்டம் நடைபெறுகிறது.

>>>>>>>><<<<<<<<

திருப்பதி, போபால் விமான நிலையங்கள் உள்ளிட்ட மேலும் 11 நகரங்களில் மின்னணு விசாவை பயன்படுத்தி வெளிநாட்டவர்கள் இந்தியா வர முடியும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிக்கையில், அகர்தலா Attari உள்ளிட்ட ஒன்பது இடங்கள் வழியாகவும், மின்னணு விசாவை பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, நாட்டில் உள்ள 88 இடங்களில் மின்னணு விசாவை பயன்படுத்தி, வெளிநாட்டு பயணிகள் இந்தியாவுக்கு வரமுடியும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

*கடந்த 2014ஆம் ஆண்டு மின்னணு விசா திட்டம் தொடங்கப்பட்டது.*

*முதலில் 43 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு தொடங்கப்பட்ட இந்த திட்டம், தற்போது 172 நாடுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.*

*சுற்றுலா, வணிகம், மருத்துவம், கல்வி உள்ளிட்ட 17 பிரிவுகளில் மின்னணு விசா வழங்கப்பட்டு வருகிறது.*

*95 சதவீத விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, 72 மணி நேரத்தில் மின்னணு விசா வழங்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*>>>>>>>><<<<<<<<*

*பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.*

*திருவள்ளூர் மாவட்டத்தில், பயனாளி ஒருவர் இத்திட்டத்தின் பயன்கள் குறித்து எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – பயனாளிகள் 30 செகண்ட்ஸ்)*

*>>>>>>>><<<<<<<<*

*மஹராஷ்ட்ராவின் Satara மாவட்டத்தில், புனே – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.*

*புனே-யிலிருந்து Satara சென்று கொண்டிருந்த கார், கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 4 பேர் உயிரிழந்ததாக காவல்துறை தெரிவித்துள்ளது.*

*காயமடைந்த 2 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*>>>>>>>><<<<<<<<*

*ஒடி□ாவின் பல்வேறு பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*Balasore, Bhadreak, Kendrapara, Cuttack மற்றும் Jagatsinghpur மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*ராஜஸ்தான், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சிலபகுதிகளில் மழைக்கு பெய்யவாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஹரியானா, பஞ்சாப், பீகார், உத்தரப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*இதனிடையே, கேரளத்தில் படிப்படியாக மழை குறையும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.*

*மாநிலத்தின் ஆலப்புழா, பத்தனந்திட்டா, கோட்டயம் உள்ளிட்ட மாவட்டங்களில் மழை காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*வயநாடு மாவட்டத்தில் மழை குறைந்து வருவதால், சுற்றுலாப் பயணிகளுக்கான தடை நீக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. Meghasree தெரிவித்துள்ளார்.*

*>>>>>>>><<<<<<<<*

*தைவான் வான் எல்லையில் சீன போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்ததாக, அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.*

*சீன கடற்படையின் ஏழு போர்க்கப்பல்கள் தைவான் நாட்டுக்கு மிக அருகே வந்ததாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*தைவான் சீனாவின் ஒரு பகுதி என்று சீனா கூறிவரும் நிலையில், அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.*

*தைவான் நாட்டில் தனி ராணுவமும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஆட்சி நடைபெற்று வருகிறது.*

*தைவான் நாட்டிற்கு தனி பொருளாதார நிர்வாகம் உள்ள நிலையில், இருநாடுகளுக்கு இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.*

*>>>>>>>><<<<<<<<*

*அமெரிக்காவில் குடியுரிமை உள்ளிட்ட வசதிகளுக்காக ஆன்லைன் விண்ணப்பங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.*

*அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன்மூலம் Green Card உள்ளிட்ட குடியரிமை விண்ணப்பதாரர்கள் பயனடைவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.*

*குடியேற்றத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் இணையதளத்தில் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

நிர்வாக செலவினங்களை குறைத்து, குடியேற்ற நெறிமுறைகளை சீர் செய்ய இந்த நடவடிக்கை பயனுள்ளதாக அமையும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் Mohun Bagan Super Giant அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கொல்கத்தாவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் Mohun Bagan அணி 6-0 என்ற கோல்கணக்கில் C.I.S.F. அணியை வென்றது.

குருப்-சி-யில் 9 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ள Sporting Club Delhi அணி, ஏற்கனவே காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் North East United அணி – F.C One அணியையும், மும்பை அணி – Nongkseh அணியையும் எதிர்கொள்கின்றன.

காலிறுதி ஆட்டங்கள் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

>>>>>>>><<<<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் நெல்லை - திருச்சி அணியையும், கோவை - திருப்பூர் அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>>>>END<<<<<<<<